தரம் 10 11

O/L

# தமிழ் மொழியும் இலக்கியமும்

# நீதிப்பாடல்கள்

ZOOM ONLINE CLASS

சரியான … றைத்
தெ… யுங்கள்

TUTE 01



The Best TAMIL ACADEMY
அகரம்
தினேஸ் ONLINE ACADEMY

REGISTER NOW
0778054232

தமிழ் ஆசான்
"அகரம் தினேஸ்"
SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

05 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

## நீதிப்பாடல்கள்

**01. நீதிநூல்கள் என்றால் என்ன?**

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் விளக்கும் நூல்கள் இவை மனித வாழ்வின் செம்மைக்கு உதவும்.

**02. உமது பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள நீதிப்பாடல்கள் எவை?**

1) விவேக சிந்தாமணி - தண்டாமரையுடன்....
2) வெற்றி வேற்கை - தேம்படு பனையின்.....
3) வாக்குண்டாம் - அடக்கம் உடையார் ....
4) திரிகடுகம் - கணக்காயர் இல்லாத ஊர் ....
5) முதமொழி வெண்பா - உப்பிலாக் கஞ்சி ....
6) நாலடியார் - யானை அனையவர்....
7) இனியவை நாற்பது - கற்றார் முன் கல்வி....

**01. விவேக சிந்தாமணி**

தண்டா மரையின் உடன் பிறந்தும்
தண்டேன் நுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து
வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலும்
அறியார் புல்லர் நல்லோ ரைக்
கண்டே களித்தங் குறவாடித்
தம்மில் கலப்பார் கற்றோரே.

**சந்தி பிரித்து எழுதுக**

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

AGARAM DHINES



Agaram Dhines (SLTS, BA Tamil, Dip in G/D) 0778054232 30 நாட்களில் O/L தமிழ்

**பொருள்**

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

**03. தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன்**

அ) தண்டேன் என்பதை பிரித்தெழுதுக...

தண் தேன்

ஆ) இங்கு மண்டுகம் என்பது

தவளை

இ) இங்கு இடம்பெற்றுள்ள தண் என்பதன் பொருள்

குளிர்ச்சி

ஈ) தாமரை என்பதற்கு ஒத்தச் சொல் ஒன்று

கமலம், அம்புஜம், முண்டகம், சரோஜம்,

**04. மண்டுகத்தின் இயல்பு - தாமரை மலருடன் வாழ்ந்தும் அதன் மலரில் உள்ள தேனைக் குடிக்காத**

அறியாமைக் குணம் கொண்து.

வண்டுகளின் இயல்பு - கானகத்தில் வாழ்ந்த போதும் தாமரை மலரில் காணப்படும் தேனை விரும்பி உண்ணும்.

அறிவுடையோர் இயல்பு - கற்றோரைக் கண்டவுடன் மகிழ்ந்து உறவாடும் தண்மை உடையோர்.

அறிவற்றோரின் இயல்பு - அறிவுடையோருடன் பலநாள் பழகியிருந்தும் அவர்களின் நற்பண்புகளை புரிய முடியாதோர்.

**05. இப்பாடல் உணர்த்தும் மையக்கருத்து**

கல்லாதார் கற்றோரின் நல்ல இயல்புகளைப் அறிய மாட்டார்கள் என்பதுடன் கற்றவர்களே கற்றோரைக் கண்ட மாத்திரத்தில் அவர்கள் இயல்பைத் தெரிந்து கொண்டு அவர்களையும் தம்மோடு சேத்துக் கொண்டு வாழ்வார்கள் என்ற அறிவில்லாதோர், கற்றோர் ஆகியோரிக் இயல்புகளை வெளிப்படுத்துகின்றது.



AGARAM DHINES

**06. இப்பாடலில் புலவர் கையாண்ட உத்தி யாது?**

கற்றோரின் இயல்பை விளக்க - கானகத்தில் இருந்து தேன் உண்ண வரும் வண்டுகளையும்

உவமானம் (தெரிந்த ஒன்று) - தாமரையில் உள்ள தேனை உண்ணும் வண்டுகள்

உவமேயம் (தெரியாத ஒன்று) - கற்றோர் இயல்பறிந்து வாழும் அறிவுடையோர்

பொது தன்மை - அறிவுடைமை

கல்லாதாரின் இயல்பை விளக்க - தடாகத்திலேயே வாழும் தவளையையும் ஒப்பிட்டுள்ளார்.

உவமானம் (தெரிந்த ஒன்று) - தாமரையுடன் வாழ்ந்தும் தேனை விரும்பாத தவளை

உவமேயம் (தெரியாத ஒன்று) - பண்டு பழகியிருந்தும் கற்றவரின் இயல்பறியா அறிவிலார்.

பொது தன்மை - அறியாமை




**02) வெற்றி வேற்கை -**

இப்பாடலை இயற்றியவர் - அதிவீரராம பாண்டியன்

இப்பாடல் இடம்பெற்ற நூலின் மறுபெயர் - நறுந்தொகை

பாடல்

தேம்படு பகையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினுங்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்கி ருக்க நிழலா கும்மே
அதனால்
பெரியோர் ரெல்லாம் பெரியோரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்

**சந்தி பிரித்து எழுதுக**

..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................

**பொருள்**

..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................

AGARAM DHINES

…………………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………………

**1) தெள்ளிய வாலின் சிறுபழத்தொருவிதை**

அ) பின்வரும் அடியை சந்தி பிரித்து எழுதுக.

தெள்ள ஆலின் சிறு பழத்து ஒரு விதை

ஆ) தெள்ளிய என்பதன் பொருள்.

தெளித்து கிள்ளி எடுக்கத் தக்க (ஆராய்ந்து)

**2) இப்பாடலின் மையக்கருத்து யாது?**

உருவத்தாலே பெரியவராக இருக்கிறவரெல்லாம் பெரியவருமல்ல

உருவத்தாலே சிறியவராக இருக்கிறவரெல்லாம் சிறியவருமல்ல.

**3) பனைமரத்தின் இயல்பு யாது - பெரிய விதையில் இருந்து முளைத்து உயரமாக வளர்ந்திருந்தாலும்,**

ஒருவர் இருப்பதற்கு நிழல் கொடுத்து உதவ முடியாமை. ஆலமரத்தின் இயல்பு - நுண்ணிய விதையிலிருந்து முறைத்து வளர்ந்தாலும் நாற்படைகளும், மன்னர்களும் தங்குவதற்கு நிழல் தந்து உதவுகின்றமை.

**4) பெரியோர் எல்லாம் பெரியோரும் அல்லர் என்பதை எவ்வாறு விளக்குகின்றார்.**

உதாரணம் அல்லது உவமை அணியைக் கையாண்டு பெரியோர் எல்லாம் பெரியோர் அல்லர் பனைமரமானது இனிய திரண்ட பழத்திலே உள்ள பெரிய விதை வானைத் தொடுவது போல்

வளர்ந்தாலும் அது ஒருவருக்கு கூட நிழல் தராது.

உவமானம் - பனைமரத்தின் நிழல்

உவமேயம் - பெரியவரின் பயன்

பொதுதன்மை - குறைவான பயன்

**சிறியோர் எல்லாம் சிறியோர் அல்லர்**

தெளித்து கிள்ளி எடுக்கப்பட்ட ஆல விதையானது, தெளிவாக தெரியும் குளத்தில் உள்ள சிறிய மீனினது முட்டையிலும் பார்க்க சிறியது, ஆனால் அதன் கொம்புகள் வளர்ந்து நாற்படையும்:

தேர்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை) மற்றும் மன்னர் இருக்க நிழல் தரும்.

உவமானம் - ஆலமரத்தின் நிழல்

உவமேயம் - சிறியவரின் பயன்

பொது தன்மை - பெரும் பயன்



Agaram Dhines (SLTS, BA Tamil, Dip in G/D) | 0778054232 | 30 நாட்களில் O/L தமிழ்

AGARAM DHINES

03) **வாக்குண்டாம்**

இப்பாடலை எழுதியவர் - ஔவையார்

வாக்குண்டாம் நூலின் மறுபெயர் - மூதுரை

**பாடல்**

அடக்கமுடையார் அறிவிலரென் றெண்ணிக்

கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்

ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்

வாடி யிருக்குமாம் கொக்கு.

**சந்தி பிரித்து எழுதுக**

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

**பொருள்**

………………………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………………………

**01) அடக்கம் உடையார் அறிவிலர்… என்றப் பாடலின் மையக்கருத்து யாது?**

கல்வியில் சிறந்து விளங்கும் அறிவுடையோர் அமைதியாக இருந்து தக்க சந்தர்ப்பம் வரும்போது சாதிப்பார்கள்.

**02. இப்பாடலில் கொக்கினுடைய இயல்பாகக் குறிப்பிடுவது யாது?**

கொக்கானது நீர் ஓடையில் திரிகின்ற அனைத்து மீன்களையும் உண்ணாது தனக்கான பெரிய மீன் வரைக் காத்திருக்கும் இயல்புடையது.

**03 . பாடலில் குறிப்பிடப்படும் அடக்குமடையார்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள்?**

கொக்கானது தனக்கான உணவு வரும் வரை எவ்வாறு காத்திருக்குமோ, அது போல் அடக்கம் உடையார்கள் தனக்கான தகுந்த காலம் வரும் வரை காத்திருப்பார்கள்.

**04. பாடலில் கொக்குவிற்கும், அறிவுடையோருக்கும் உள்ள பொது தன்மை யாது?**



AGARAM DHINES

தக்க காலம் வரும் வரையும் காத்திருத்தல்.

**05. மடைத்தலையில் ஓடு மீன் ஓடு உறு மீன் வருமளவும் காத்திருக்குமாம் கொக்கு ?**

**01. மடைத்தலை என்றால் என்ன?**

நீர் நிறைந்த குளம் (வாய்கால்)

**02. ஓடு மீன் என்று குறிப்பிடுவது என்ன?**

குளத்தில் ஓடுகின்ற சிறிய மீன்

**03. உறு மீன் என்று குறிப்பிடும் சொல்லின் பொருள் யாது?**

பெரிய மீன்

**04. இப்பாடலில் இடம் பெற்றுள்ள உரிச் சொல் யாது?**

உறு - பெரிய

**06. அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக் கடக்க கருதவும் வேண்டாம் ?**

**01. அறிலார் என்று குறிப்பிடுவது ?**

அறிவில்லாதவர்கள்

**02. கடக்க கருத வேண்டாம் என்பது என்ன?**

வெல்வதற்கு நினைக்க வேண்டாம்

**03. அடக்கம் உடையோரை எவ்வாறு கருதிவிடக்கூடாது?**

அறிவில்லாதவர்கள் என்று எண்ணிவிடக்கூடாது

**07. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அணி பற்றி விளக்குக.**

இப்பாடலில் உவமை அணி பயன்படுத்துப்பட்டுள்ளது.

இப்பாடலில் அடக்கமுடையோரின் பணிவானது நீர் ஓடு வாய்காலில் மீனினது வருகைக்காக காத்திருக்கும் கொக்கிற்கு உவமிக்கப்பட்டுள்ளது.

கொக்கானது எவ்வாறு தனக்கான உணவு வரும் வரை காத்திருந்து அதனைப் பெற்றுக்கொள்ளுமோ

அதே போல அறிவுடையோர்கள் தனக்கான காலம் வரும் வரையும் காத்திருந்து காரியத்தை சாதிப்பார்கள் அல்லது கைகொள்வார்கள்.

உவமானம் - வாடி நிற்கும் கொக்கு

உவமேயம் - அடக்கமுடையோர்

பொது தன்மை - தனக்கானது கிடைக்கும் வரை காத்திருப்பது

AGARAM DHINES

**4) திரகடுகம் - கணக்காயர்இல்லாத ......**

**பாடல்**

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கஅறுக்கும்

மூத்தோரை இல்லா அவைக்களனும், பார்த்து உண்ணுந்

தன்மை யிலாளர் அயல் இருப்பும் - இம் மூன்றும்

நன்மை பயத்தல் இல.

**சந்தி பிரித்து எழுதுக**

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

**பொருள்**

...................................................................................................................................................

...................................................................................................................................................

...................................................................................................................................................

...................................................................................................................................................

...................................................................................................................................................

...................................................................................................................................................

...................................................................................................................................................

...................................................................................................................................................

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**01. திரிகடுகம் என்பதில் உள்ள மூன்று மருந்துப் பொருட்கள் யாவை?**

சுக்கு, மிளகு, திப்பிலி

**02. திரிகடுகம் எனும் நூலின் ஆசிரியர் யார்?**

நல்லாதனார்

**03. இந் நூல் திரிகடுகம் என அழைக்கப்படுவதற்கான காரணம் என்ன?**

மூன்று மருந்து பொருட்கள் உடல் நோயினை நீக்குவது போல ஒவ்வொரு பாடலிலும் உள்ள மூன்று கருத்துக்கள் உயர் நலம் பேணும்.

**05. இந்நூலை நீதிப்பாடல்களுள் அடக்குவதற்கான காரணம் என்ன?**

மனித வாழ்வை செம்மைப்படுத்துவதன் காரணமாக

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கு அறுக்கும்

மூத்தோரை இல்லா அவைக்களனும் என்ற அடியை அடிப்படையாகக் கொண்டு

அ) கணக்காயர் என்போர் யார்?





AGARAM DHINES

ஆசிரியர்

ஆ) பிணக்கு என்பதன் ஒத்த சொல்,

முரண்பாடு

இ) அவைக்களன் என்பதன் பொருள் யாது?

சபை கூடும் இடம்

ஈ) மூத்தோர் என்பதன் எதிர்கருத்துச் சொல்லைத் தருக.

இளையோர்

**வாழ்க்கைக்கு நன்மை தராத மூன்று விடயங்கள் எவை?**

1. ஆசிரியர் இல்லாத ஊர்
2. மூத்தார் இல்லாத அவை
3. உணவைப் பகிர்ந்து கொடுத்து உண்ணுபவர்கள் இல்லாத அயல் இருப்பு

**05. முதுமொழி வெண்பா - உப்பிலாக் கஞ்சி....**

ஆசிரியர் - புலவர் மணி ஷரிபுதீன்

பாடல்

உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண்டதுமா ளிகை

**சந்தி பிரித்து எழுதுக**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**பொருள்**

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................





AGARAM DHINES

.............................................................................................................................................

.............................................................................................................................................

**01) இப்பாடல் உணர்த்தும் மையக்கருத்து யாது?**

கிடைத்ததைக் கொண்டு வாழ்ந்தால் மன நிறைவுடன் வாழலாம் என்று இப்பாடல் வலியுறுத்துகிறது. மனங்கொண்டதே மாளிகை

**02) உப்பிலாக் கஞ்சியினை என்ற பாடல் எவர்கள் மனநிறைவுடன் வாழ்வார்கள் எனக் கூறுகின்றது.**

1) உப்பிலாக் கஞ்சியை அறுசுவை உணவாக நினைத்து உண்டு வாழ்பவர்கள்.

2) கிழிந்த ஆடையைத் தைத்து புதிய பட்டாடை அணிவது போல எண்ணி அணிந்து வாழ்பவர்கள்.

3) பனையோலைப் பாயிலே படுத்து உறங்குபவர்களும் மனநிறைவுடன் வாழ்வார்கள்.

**03) பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.**

1) தப்பிய - துவைத்த 2) கந்தை - கிழிந்த துணி

3) பீதாம்பரம் - பட்டாரை 4) ஒப்பும் - ஒத்தது

**06) நாலடியார் - யானை அனையவர்**

நாலடியார் பாடலைப் பாடியவர்கள் - சமண முனிகள்

யானை அனையவர் நண்பு ஒரீஇ நாய் அனையார்

கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் - யானை

அறிந்து அறிந்தும் பாகனையே கொல்லும்

எறிந்தவேல் மெய்யதா வால்குழைக்கும் நாய்

**சந்தி பிரித்து எழுதுக**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**பொருள்**

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................





AGARAM DHINES

**01. இப்பாடல் கூறும் மையக்கருத்து யாது?**

01. பழிவாங்கும் அல்லது பிழை பாராட்டும் இயல்புடையாரது நட்பை விலக்கி, நன்றியுணர்வு உடையோருடனே நட்பு கொள்ள வேண்டும்.

02. யானையின் இயல்பு யாது - யானை பழிணர்ச்சி மிக்கது: பலநாட்கள் பழகியிருந்தும் பாகனையே கொல்லும்.

03. நாயின் இயல்பு யாது - நாய் நன்றியுள்ளது எசமான தண்டித்தாலும் வாலை வளைத்து ஆட்டும்.

**04. புலவர் கையாண்டுள்ள உத்தி முறை யாது?**

உவமை அணியைக் கையாண்டு விளக்கியுள்ளார்.

யானை போன்றோரது நட்பு

உவமானம் - யானை

உவமேயம் - நன்றி மறந்து பழி வாங்குவோர்

பொதுத்தன்மை - நன்றி மறத்தல்.

நாய் போன்றோர்களது நட்பு

உவமானம் - நாய்

உவமேயம் - நன்றி உடையோர்

பொதுத்தன்மை - நன்றி உடைமை

**07) இனியவை நாற்பது - கற்றார் முன் கல்வி உரைத்தல்....**

கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே

மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே

எள்துணை யானும் இரவாது தான் ஈதல்

எத்துணையும் ஆற்றல் இனிது

**சந்தி பிரித்து எழுதுக**

...................................................................................

...................................................................................

...................................................................................

...................................................................................

**பொருள்**

.......................................................................................................................................

.......................................................................................................................................



AGARAM DHINES
Agaram Dhines (SLTS, BA Tamil, Dip in G/D) 0778054232 30 நாட்களில் O/L தமிழ்

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

**இப்பாடலை எழுதியவர் யார்?**

புதஞ்சேந்தனார்

01. கற்றார் முன் .... என்ற பாடலில் கூறப்பட்டுள்ள இனிய செயல்கள் எவை?

1) கற்றார் முன் கல்வி உரைத்தல்

2) அறிவில் மேம்பாடுரையவர்களிடம் சேர்தல்.

3) சிறிதளவேனும் பிறரிம் இரக்காது: தன்னிடம் உள்ளவற்றை பிறருக்குக் கொடுத்தல்.

AGARAM DHINES